கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　　　　　　　தேதி: 22.03.2024
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "அக்ரிடெக் மேனிஃபெஸ்ட்' 24" – சர்வதேச தொழில்நுட்ப கருத்தரங்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "Farming the future: Engineering the Sustainable Agriculture" என்ற தலைப்பில் "அக்ரிடெக் மேனிஃபெஸ்ட்' 24" என்ற சர்வதேச தொழில்நுட்ப கருத்தரங்கமானது மார்ச் 19, 2024 அன்று கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அண்ணா அரங்கத்தில் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஏற்பாடு செய்தது. பொறியியல் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் விவசாய சமூகத்தை மேம்படுத்துவதற்கான தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர் மற்றும் சுமார் அறநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று அழகு சேர்த்தனர்.

இந்த சர்வதேச கருத்தரங்கமானது பல்வேறு நிறுவனங்களில் சிறப்பாக பணியாற்றும் இளம் பொறியியல் வல்லுநர்கள் நிலையான விவசாயத்தை அடைவதற்கான பொறியியல் தீர்வுகளை செம்மையாக வழங்கினார்கள். மேலும் நிகழ்வின் முக்கிய அங்கமாக மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு பொறியியல், பண்ணை இயந்திரவியல் மற்றும் ஆற்றல் பொறியியல், உணவு பதன்செய் பொறியியல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் ஆகியவற்றை உள்ளடக்கிய பதினான்கு கருப்பொருள் கொண்ட பகுதிகளில் கருத்தரங்கம் திட்டமிடப்பட்டது. ஆன்லைன் மற்றும் நேரடி முறை மூலம் 375 ஆராய்ச்சிக்கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் இரா .தமிழ்வேந்தன் அவர்கள் சிறப்புரையாற்றினார். வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் திரு.அ.ரவிராஜ் அவர்கள் எழுச்சி மிக்க கருத்துக்களை மாணவர் சமுதாயத்திற்கு வாழ்த்துரையாக வழங்கினார். மேலும் சிறப்பு விருந்தினராக வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் திரு.N.வெங்கடேசபழனிச்சாமி சிறப்புரை

ஆற்றினார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக பொறியாளர் ராஜசேகர் சித்தேஸ்வரன் அவர்கள் பங்கேற்று எழில் சேர்த்தார். மேலும் அவர் தனது தொழில்முறை அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டு மாணவர்களை ஊக்கப்படுத்தினார். கருத்தரங்கின் பொழுது ஆராய்ச்சி புத்தக தொகுப்பு (Souvenir Book) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், முதன்மையர் (வேளாண்மை), முதன்மையர் (வேளாண் பொறியியல்) மற்றும் சிறப்பு விருந்தினரால் வெளியிடப்பட்டது. தொடக்க விழாவின் போது பண்ணை இயந்திரவியல் மற்றும் ஆற்றல் பொறியியல் துறைத்தலைவர் முனைவர் ரா.கவிதா வரவேற்புரையாற்றினார். நன்றியுரையை மாணவர் அமைப்புச் செயலாளர் திரு.அ.ப்ரணவ் கிருஷ்ணா வழங்கினார். இறுதியாக முனைவர் ரா.கவிதா மற்றும் முனைவர் A.P.மோகன்குமார் அவர்களது வழிகாட்டலால் இம்மாபெரும் நிகழ்ச்சி இளநிலை வேளாண் பொறியியல் மாணவர்களால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*